In the Court of the I Additional District Judge, I Additional District Court, Namakkal.

<u>O.S. No.204/2023</u> நாள் : 01.10.2024 Time 12.40 PM

<u>வா.சா.1 (சரசு) அழைக்கப்பட்டு சத்தியப்பிரமாணம் செய்யப்பட்டு 4–ம் பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை –</u>

தாவா சொத்துக்கள் எனக்கு பாத்தியமானது என விளம்புகை செய்யவும், தாவா சொத்துக்களை நான் அனுபவிப்பதை பிரதிவாதிகள் இடையூறு செய்யக்கூடாது என இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரிதான். எனது பாட்டானர் பெயர் அருணாச்சலம், பாட்டியின் பெயர் காளியம்மாள். அருணாச்சலம், காளியம்மாள் தம்பதியினருக்கு குப்புசாமி, நல்லுசாமி என இரண்டு மகன்கள். அந்த குப்புசாமி எனது தந்தையார். என் தந்தையார் குப்புசாமிக்கு இரண்டு மனைவிகள் என்றால் சரிதான். அதில் முதல் மனைவி எனது தாயார் காளியம்மாள் ஆவார். எனது தாயார் உயிருடன் இருக்கும்போதே 1–ம் பிரதிவாதி செல்வத்தை என் தந்தையார் திருமணம் செய்து கொண்டார். அவர்களுக்கு மதிவாணன் என்கிற ஒரு மகன் பிறந்தார். அவர் இந்த வழக்கில் 2–ம் பிரதிவாதி என்றால் சரிதான். குப்புசாமி, செல்லம்மாளுக்கு நான் மற்றும் எனது சகோதரர் ராஜாகண்ணு ஆகியோர் மக்கள். என் சித்தப்பாவிற்கு ஒரே மகன்தான். அவர் பெயர் அசோக்குமார். அசோக்குமார் இறந்துவிட்டார். அசோக்குமாருக்கு ஒரே மகன். அசோக்குமாரின் மனைவி கார்த்திகா, மகன் கிரிஸ் என்கிற கிருஷ்ணா. கார்த்திகா இந்த வழக்கில் தரப்பினர் அல்ல என்றால் சரிதான். நல்லுசாமி மனைவி எப்போது இறந்தார் என்றால் நல்லுசாமி இறப்பிற்கு பின் இறந்தார். அவரது பெயர் சின்னம்மாள். இந்த வழக்கில் ஏ செட்யூல் சொத்துக்கள் குப்புசாமிக்கு 1981 பாகப்பிரிவினையில் ஏ அட்டவணை

சொத்துக்களாக பிரிந்தது என்றால் சரிதான். அதேபோல் பி செட்டியூல் சொத்தாக காட்டியுள்ள சொத்தானது எனது பாட்டனார் அருணாச்சலம்–காளியம்மாள் 1948–ம் ஆண்டில் கிரையம் வாங்கிய சொத்து என சொல்லியுள்ளேன் என்றால் சரிதான். ஏ அட்டவணை சொத்தை பொறுத்து எனது தந்தையார் வாய்மொழியாக தானம் கொடுத்ததாக இந்த வழக்கில் சொல்லியுள்ளேன் என்றால் சரிதான். பி செட்யூல் சொத்துக்களில் காளியம்மாளின் பாகத்தை பொறுத்து காளியம்மாள் உயிருடன் இருக்கும்போதே தனது கணவரான அருணாச்சலத்திற்கு வாய்மொழி தானம் கொடுத்துவிட்டார் என்று சொல்லியுள்ளேன் என்றால் சரிதான். அதன் பின்னிட்டு எனது பாட்டனார் எனக்கு வாய்மொழி தானம் கொடுத்தாக கூறியுள்ளேன் என்றால் சரிதான். நான் சொல்வதுபோல் வாய்மொழி தானம் என்பது சட்டத்தால் அங்கீகரிக்கப்படாதது என்பதால் நான் கேட்டுள்ள பரிகாரம் கிடைக்கதக்கதல்ல என்றால் சரியல்ல.

(விசாரணை முடிந்த நேரம் 12.50 PM)